The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, the rigs manufactured in Ranchi are indigenous rigs. They are manufactured in our country. But I cannot say whether any preference will be given to the rigs manufactured in Coimbatore.

Thiru M. A. LATHEEF : **Will the Hon. Minister be pleased to state whether the agricultural engineering workshop at Washermanpet at Madras manufactures power drills and if so, the number of drills manufactured last year and the number of specifications given to the said workshop to produce the power drills?**

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, the Engineering workshop at Washermanpet is being upgraded and is being equipped with better machinery so that it can itself produce these drilling rigs. Last year there was a proposal to manufacture some drilling rigs at this engineering workshop and they were able to produce a few. I am not able to say off-hand how many.

நீலகிரியிலுள்ள பட்டு நூல் தொழிற்சாலை

*378 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின் மூலம் நீலகிரியில் நடைபெறுகின்ற பட்டுநூல் உற்பத்தி தொழிற்சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

(முற்பகல் 10-00) திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தப் பட்டு நூல் தொழிற்சாலையானது லாபத்தில் ஓடுகிறதா? அந்தப் பட்டு நூற் தொழிற்சாலையில் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு பட்டு உற்பத்தி ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்ட மூலக் கேள்வியானது, நீலகிரியில் கதர் கிராமக் கைத்தொழில் கூட்டுறவு கைத்தொழில் வாரியத்தில் நடைபெறுகின்ற இந்தப் பட்டு நூற்தொழிற்சாலையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா என்பதாகும். அதற்கு, இல்லை என்று பதில் சொன்னேன். அடுத்தாற்போல் உறுப்பினர் அவர்கள் இது லாபத்தில் ஓடுகிறதா, நஷ்டத்தில் ஓடுகிறதா என்று கேட்கிறார்கள். பதில், லாபத்தில் ஓடவில்லை, நஷ்டத்திலும் ஓடவில்லை. ஏனென்றால், அப்படி ஒரு தொழிற்சாலையே இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் மசனகூட பகுதியில் பட்டு எடுக்கிறார்கள். அதற்கு எத்தனை ஏக்கரில் மல்பேரி பயிர் செய்யப்படுகிறது, எவ்வளவு பட்டு எடுக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே. மூலக் கேள்விக்கும் இக்கேள்விக்கும் சம்பந்தமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.